Conference Proceedings

# Tradition or Trans/Formation?

# Craft, Practice and Discourse

Edited

T. Sanathanan

Ayesha Abdur - Rahman

Department of Fine Arts, University of Jaffna

2018

Editorial assistant: Stephan Kirubalini

Cover Image: Tharmapalan Tilaxan

The International Conference Tradition or Trans/Formation? Craft, Practice and Discourse

10th - 12th May 2018

Organized by

Department of Fine Arts, University of Jaffna,

in collaboration with

Lanka Decorative Arts

American Institute for Sri Lankan Studies

Sri Lanka Archive of Contemporary Art, Architecture & Design

at

Jaffna Public Library

ISBN : 978-955-0585-42-7

# கண்டுபிடிப்பும் அழிப்பும்: யாழ்ப்பாணத்தின் நெசவு சமூகத்தினரின் சாதி அடையாளம்

*ஸ்ரீபன். கிருபாலினி*

## அறிமுகம்

பண்டைய யாழ்ப்பாணத்தில் வாழ்வியலோடு பிணைந்ததாகவும் கலையுணர்ச்சியின் ஆதாரமாகவும் பலவகையான பாரம்பரியக் கைத்தொழில்கள் காணப்பட்டன. இக்கைத்தொழில்களுக்கும் (தொழிற்பிரிவினை) சாதி உருவாக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. பக்தவத்சல பாரதி 'சாதியின் தோற்றம்' பற்றிக் குறிப்பிடுகையில் தனது ஆறு கோட்பாடுகளுள் ஒன்றாகத் தொழிற் கோட்பாட்டினைக் (Occupational theory) குறிப்பிட்டள்ளார்.[1] தொழிற் கோட்பாடு சாதியை செய்யும் தொழில் அடிப்படையில் வரையறுக்கிறது. இவ்வடிப்படையிலே யாழ்ப்பாணத்தில் சாதிநிலைப்பட்ட தொழிற்பிரிவுக்கே அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. இன்ன சாதியினருக்கு இன்ன தொழில் உரித்துடையது என வகுக்கப்பட்டிருந்ததோடு ஒவ்வோர் சாதிக்குமான உரிமைகளும் கடமைகளும் கூட வகுக்கப்பட்டிருந்தன. தொழில்முறைமை, கல்வி, உறவு ஆகியனவும் பொதுவாக சாதி அடிப்படையிலே இடம்பெற்றன. ஆனால் சாதியடிப்படையிலான தொழிற் கட்டிறுக்கங்களையும், மரபையும் காலனித்துவத் தாக்கம், புதிய பொருளாதார அமைப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த யுத்தம் ஆகியன மாற்றியுள்ளன. அவ்வகையே யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலையில் பெரிதளவில் சாதி அடிப்படையிலான தொழில் பயில்வு காணமுடியாதாயினும் இன்றும் சில சாதிகளின் சில சடங்காசாரங்களைத் தொடர்ந்து பேணுவதையும் ஒரு சில சாதியினர் தங்களின் அடையாளங்களைத் தக்கவைக்க முயல்வதையும் சிலர் அகப்பிரிவுகள் குறைந்த பெருஞ்சாதிக் குழுமத் தோற்றத்துக்குள் நகர்தலின் வழி சாதியினை மறைத்தலும் நிகழ்கின்றதை அவதானிக்க முடிகிறது. இந்நிலபரங்களினை யாழ்ப்பாணத்தின் நெசவுடன் தொடர்புடைய சாதியினருடன் தொடர்புறுத்தி வாசிக்க இவ்வாய்வு முயல்கிறது.

## யாழ்ப்பாணத்தின் துணி நெசவும் அதுசார் சமூகமும்

யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரையில் நெசவானது முதன்மையானதொரு கைத்தொழிலாகக் காணப்பட்டுள்ளது. அதற்க்கு எடுத்துக்காட்டாக நெசவின் மூலப்பொருளான பருத்தி உற்பத்தி செழிப்புற்றிருந்தமையினை இங்கு காணப்படும் சில ஊர்களின் பெயர்களான பருத்தி அடைப்பு, பருத்தி வேலி, பருத்தியோலை, பருத்திக்கலட்டி, பருத்திக்குடியிருப்பு, பருத்தித் தீவு (கப்பூது) போன்றன சான்றுபகிர்கின்றன.[2] அத்தோடு வடக்கின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றான "பருத்தித்துறை" (Cotton harbor) எனும் பெயரும் இன்னோர் ஆதாரமாகும்.[3] இத்துறைமுகத்தினூடாகப் பருத்தி நூல், நெய்யப்பட்ட பருத்திப் புடைவை என்பவற்றின் ஏற்றுமதி, இறக்குமதி பாரியளவில் நடைபெற்றமையாலே இவ்வாறு பெயர் உருவாகியது.[4] இவ்வகையாக ஆடையுற்பத்தியின் மூலப் பொருளான பருத்தி இங்கு விளைவிக்கப்பட்டுள்ளதோடு, பருத்தி நூல் நூற்றலும் ஆரம்பகாலங்களில்

இங்கு இடம்பெற்றுள்ளது ஆனால் பிற்காலங்களில் பெருமளவில் பருத்தி பயிரிடல், நூல் நூற்றல் இங்கு கைவிடப்பட்டு இந்தியாவிலிருந்து துணி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. காலனிய எதிர்ப்பின் விளைவான காந்தியின் கதர் இயக்க எழுச்சியின்போது மீண்டும் இங்கு பெருமளவில் நூல்நூற்றல் இடம்பெற்றுள்ளமையிமையினை அக்காலச் செய்தித்தாள்கள் மூலம் அறியமுடிகின்றது. அச்செய்திகளினூடு ஒவ்வோர் வீட்டிலும் நூல்நூற்கும் இராட்டினம் காணப்பட்டுள்ளமையையும், கைராட்டினம் அமைப்பு பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

யாழ்ப்பாணத்தின் நெசவுத் துணிகள் அதன் வர்ணத்தின் தனித்தன்மையினால் அதிகம் அறியப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் துணிகளிற்கான சாயம் இயற்கையான சாயவேரிலிருந்து (Oldenlandia Umbellata/ Hedyotis Umbellata) பெறப்பட்டுள்ளது. இது ஒல்லாந்த காலத்தில் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகவும் காணப்பட்டது. இதனை நாம் பல ஒல்லாந்த கால ஆவணங்களில் அறியக் கூடியதாக உள்ளதோடு மேலும் யாழ்ப்பாண அரசன் "சாய ராசா" [5] (Xaya Raja) எனப் போர்த்துக்கேயரால் அழைக்கப்பட்டமையும், ஏற்றுமதிக்கான துணிகளினைச் சாயமேற்றுவதற்கான ஒரு உற்பத்தி நிலையம் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளமை,[6] சாயவேர் வளர்வதற்கான காலநிலை இங்கு காணப்படுகின்றமை,[7] சாயவேர் பயிரிடல் மற்றும் பிடுங்குதல் பற்றிய குறிப்புகள் ஒல்லாந்த ஆவணங்களிலிருந்து அறியக் கிடைக்கின்றமை,[8] மற்றும் வேர்குத்திக்கடவை(Root diggers' pass),[9] வேரப்பிட்டி,[10] வேரக்கட்டு/வேரத்திட்டல்[11] ஆகிய சாயவேருடன் தொடர்புடைய இடப்பெயர்கள்[12] ஆகியவற்றின் மூலம் யாழ்ப்பாணச் சாயத்திற்கு இருந்த மதிப்பினையும், யாழ்ப்பாணத்தில் சாயமிடல் தொழில் சிறந்து விளங்கியமையும் அறியமுடிகிறது. யாழ்ப்பாணத்தில் நெய்யப்பட்ட துணிகளிற்க்கு இயற்கைச் சாயமூட்டல் மட்டுமன்றி துணிகளின் மேல் இயற்கைச் சாயத்தினைப் பாவித்து பதிப்பித்தல், சித்திர வேலைப்பாடுகள் செய்தல் இதன் இன்னோர் கிளைத் தொழிலாக முதன்மை பெற்றிருந்தது.[13]

பருத்தி உற்பத்தி, நூல் நூற்றல், துணி நெய்தல், துணிகளிற்க்கு இயற்கைச் சாயம் ஏற்றுதல், அதனுடன் தொடர்புற்றதாக சாயவேர் பிடுங்குதல் அல்லது கிண்டுதல், துணிகளில் மேல் ஓவியம் வரைதல் என ஒன்றுடனொன்று தொடர்புற்ற இத்துறைகளில் யாழ்ப்பாணம் முதன்மை பெற்றிருந்ததோடு மேற்குறிப்பிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் ஒரே சமூகத்தினர் ஆற்றவில்லை. அதற்கென வெவ்வேறு சாதிக்குழுமங்கள் தொடர்புற்றிருந்தனையும் அறிய முடிகின்றது.

**நெசவும் சாதியும்**

யாழ்ப்பாண இராச்சிய காலத்திலிருந்து காலனிய காலம் வரைக்கும் யாழ்ப்பாணத்தில் நெசவுடன் தொடர்புடைய பலதரப்பட்ட படிமுறைகள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடையதாகப் பல சாதிக் குழுமங்கள் காணப்பட்டதனை தமிழ் நூல்களாகிய யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் மற்றும் ஒல்லாந்த,

5 TamilNet - Know the Etymology: 407, Accessed on 10.04. 2018.

6 Cohen, "The Unusual Textile Trade between India and Sri Lanka: Block-prints and Chintz", 16 – 27.

7 Balmforth, "Surveying Lankan Chintz: Slavery, Aesthetics and Textile production in Colonial Jaffna" Talk at Sri Lankan Archive of Contemporary Art, Architecture and Design, Jaffna, Sri Lanka. 2 July 2017.

8 Vink, *Encounter on the opposite Coast: The Dutch East India and the Nayaka State of Madurai in the Seventeenth Century*, 276.

9 வலிகாமம் தென்மேற்குப் பிரிவிலுள்ள இளவாலை எனும் இடம்.

10 யாழ்ப்பாணத்தில் காரைநகர் தீவிலுள்ள இடம்.

11 தென்மராட்சிப்பிரிவில் மந்துவிலிற்கு அருகில் சாயவேர் அதிகமாக வளரும் நிலப்பகுதி.

12 Ragupathy, *Early Settlements in Jaffna*, 53.

13 வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, 189.

பிரித்தானிய கால அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.[14] இந்நெசவுத் தொழில்சார் சாதிக் குழுமங்களில் சிலர் சுதேசிகளாகவும், சிலர் இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து யாழ்ப்பாண அரசர்கள், காலனிய காலக் கம்பனியின் கீழ் தொழிற்பட்டவர்களாகவுமிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்த தொழில் வாரியான சாதிமுறைமை, அவற்றின் உருமாற்றம் பற்றி பல்வேறு நூல்களின் வரலாற்றுத் தகவல்கள் மூலம் வாசிக்கமுடிகின்றது. அவ்வகையே யாழ்ப்பாண இராச்சியகால வரலாற்றினை அறிய உதவும் முக்கிய நூல்களில் ஒன்றான வையாபாடலில் நெசவுத் தொழில் பற்றி நோக்குகையில் அதில் நெசவுடன் தொடர்புறுத்தப்படும் ஓர் சாதியினராகிய 'கைக்குளர்'எனும் ஒரு சாதிப் பெயரினை மட்டுமே காணமுடிகின்றது.

"கைக்குளர் சாண்டார் குயவர் வலைஞர் சீனர்
காராளர் திமிற்பரவ ரிவர்களோடு
மைக்குழலார் நட்டுவர் மாமறவர் மிக்க
மலையகம் நல்லகம்படிகோ முட்டியானோர்.......
எக்குலமுங்கூடி யாழ்ப்பாணந்தன்னி
லிதமுடனே சிறந்து வீற்றிருந்தார் மாதோ"[15]

அதேபோன்று கி.பி 17ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த தொமஸ் வான்றீயின் 1697இல் வெளியிடப்பட்ட நினைவேட்டில் வடபகுதியிற் காணப்பட்ட 40சாதிகள் பற்றிய குறிப்பும் அவைகள் கிழக்கிந்தியக் கம்பனிக்கு இறுத்த வரிப்பணம் பற்றியும் குறிப்பிடுகின்றது. அங்கே நெசவுடன் தொடர்புடையவர்களாகப் பல சாதியினரின் பெயர்கள் காணமுடிகின்றது. "(12)நெசவாளர், (17) வேர்குத்திப்பள்ளர், (18)சாயக்காரர், (28)சித்திரக்காரர், (37)கோலியப்பறையர் - காலிக்காறர்" ஆகியோர் பட்டியற்படுத்தப்பட்டுள்ளதனை கலாநிதி. சி. க. சிற்றம்பலம் அவர்கள் தனது யாழ்ப்பாண இராச்சியம் நூலில் மேற்கோள் காட்டியுள்ளார்.[16] அதேபோன்று டச்சுக்கார ஆட்சியின்போது ஆரம்பத்தில் சமய நடவடிக்கைகளிலீடுபட்ட பால்டுவாஸ் பாதிரியாரின் நேர்முகக் குறிப்புகளிலும், ஒல்லாந்தத் தேசாதிபதிகளின் நினைவேடுகளிலும், சனத்தொகை மதிப்பீட்டுக் குறிப்புகளிலும் நெசவுடன் தொடர்புடைய சாதிகளின் பெயர்களைக் காணமுடிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக 1790 இல் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் தலை வரி வசூலிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட சாதி வாரியான சனத்தொகை கணக்கெடுப்பின்போது காணப்பட்ட சாதிகள் பற்றி யாழ்ப்பாணச் சரித்திரம் என்கின்ற நூலில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிட்டிருக்கின்றார். இதிலே 58 சாதிப்பிரிவுகளும் அச்சாதிகளைச் சேர்ந்த 16 முதல் 70 வயதுக்குட்பட்ட ஆண்களின் தொகையும் கொடுக்கப்பட்டுள்ளன.[17] அதன் பிரகாரம் நெசவுடன் தொடர்புடைய சாதிகள் கீழ்வருமாறு தரப்பட்டிருக்கின்றது.

வர்ணகாரர் 27
வண்ணார் 857
சாயக்காரர் 118
சேணியர் 100
கைக்கோளர் 379
குளிகாரப்பறையர் 7
சாயவேர்ப்பள்ளர் 367
சாயவேர்ப்பறையர் 208



14 *சிற்றம்பலம், யாழ்ப்பாண இராச்சியம்,* 150- 153.
15 *சிற்றம்பலம், யாழ்ப்பாண இராச்சியம்,* 150- 151.
16 *சிற்றம்பலம், யாழ்ப்பாண இராச்சியம்,* 150- 151.
17 முத்துத்தம்பிபபிள்ளை, *யாழ்ப்பாணச்சரித்திரம்,* 157.

இதேபோன்று 1830இல் சீமோன் காசிச் செட்டியினால் அப்போதைய இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக திரட்டப்பட்ட சாதிக் குழுக்களின் தரவுகள் (Census report of 1830 based on caste of Jaffna) எடுத்து நோக்கின் அதிலும் அன்றிருந்த சாதிகள் மற்றும் அச்சாதி மக்களின் எண்ணிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.[18]

கைக்கோளர் 1043

சாயக்காரர் 902

நெசவுக்காரர் 272

பிரித்தானிய கால இத்தரவில் ஒல்லாந்த, போர்த்துக்கேய இறுதிக் காலத்தில் எடுக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ளன போன்று தொழில் ரீதியான சாதிப் பெயர்கள் சிலவற்றினைக் காணமுடியவில்லை. கைக்கோளர், நெசவுக்காரர் என இரு பெயர்களினை நெசவு செய்பவராகக் குறிப்பிடுகின்றனர். இதிலுள்ள நெசவுக்காரர் என்பது தொழிற் பெயராக கருதமுடியுமே தவிர அது ஒரு சாதிப் பெயராக இருக்க வாய்ப்பில்லை. அத்தோடு சாயவேர் கிண்டுதலுடன் தொடர்புடைய சாதிகளின் பெயர்களைக் காணமுடியவில்லை.

யாழ்ப்பாணச் சமூகத்தில் 'சாதிக்குள் சாதி' பார்க்கப்படுவது தொன்று தொட்டு இருந்தது வந்துள்ளது. அதாவது ஒரு தனிப்பட்ட சாதிக் குழுவில் வேறுபட்ட சமூக அடுக்கமைவைக் கொண்ட உட்சாதிகள் காணப்பட்டன. அதாவது ஒவ்வொரு சாதிக் குழுவும் அடுக்கமைவு அடிப்படையிலான பிரிவுகளைத் தன்னுள் உள்ளடக்கியிருந்தது. இவ் உட்சாதிக் கட்டுமானது நெசவுக் குழுமங்களிடையேயும் காணப்பட்டதனை 1905 இல் வெளியான எஸ். கதிரேசு அவர்களின் "Hand book to the Jaffna Penninsula & a souvenior of the opening the railway station to the north" எனும் நூலில் காணலாம். இதிலே நாற்பத்தைந்து நகர சேவகர்கள் பற்றிய வகைப்பாட்டினைத் தருகையில் 28வது இடத்தில் சாயமிடுவோர், சாயக்காரர் (Chayakara/ Dyers) களினையும் ஆடை நெய்வோரில் காணப்பட்ட உயர்ந்த, தாழ்ந்த என வெவ்வேறு குழுமத்தினரினை 32-36 வரையே ஒழுங்கே சேடர், சேணியர், கோலியர், கைக்கோளர், சாலியர் எனவும் வகைப்படுத்தியுள்ளார்.[19] நெசவுடன் தொடர்புடைய உட்சாதிகளில் கவனமெடுத்தளவுக்கு பறையர்கள், பள்ளர்களில் வேர் குத்துபவர்கள் அல்லது கிண்டுபவர்கள் பற்றிப் பேசப்படவில்லை.

பேராசிரியர். கார்த்திகேசு சிவத்தம்பி சொல்வது போன்று எவ்வாறு பல அயற் சாதிகள் ஒன்று சேர்ந்து மெல்ல மெல்ல வெள்ளாளர்கள் ஆகினார்களோ[20] அதே போன்று குளிகாரப் பறையர், சாயவேர்ப் பறையர் மற்றும் வேர்குத்திப் பள்ளர், சாயவேர்ப் பள்ளர் என்போர் பிற்காலத்தில் பொதுச்சாதிப் பெயருக்குக் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கவேண்டும் ஏனெனில் பிற்கால ஆவணங்கள் பலவற்றில் அவர்களது சாதிப்பெயர்கள் பெரிதளவில் புலப்படவில்லை.

பிரித்தானிய காலத்தில் கைத்தொழில் புரட்சியின் விளைவால் இராசாயன சாயம் மற்றும் இயந்திரத்தறி நெசவுப் பாவனைக்கு வரும் பொழுது குறிப்பிட்டளவில் நெசவு தொடரப்பட்டாலும், இயற்கைச் சாயமிடலும், சாயவேர்த் தொழிலும் யாழ்ப்பாணத்தில் அருகிப் போயுள்ளதனை



18 *விஜயகுமார், "யாழ்ப்பாண சூத்திர வெள்ளாளர் உயர் சாதியா?"*. Accessed on 08.03. 2018.

19 Katiresu, *A Handbook to the Jaffna Penninsula & Souvenir of the opening the railway to the north.* 82-83.

20 *சிவத்தம்பி, யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்*, **29.**

அறியமுடிகின்றது.[21] இதனால் இச்சாதியினர் இத்தொழில்களினை விட்டு விலகி வேறு தொழில்களிற்குள் நகர்வதன் வழி தம் சாதி அடையாளத்தினை பொதுப் பெயரில் பறையர், பள்ளர் எனப் பெருஞ்சாதி அடையாளத்துக்குட்படுத்தியிருக்க வேண்டும்.

இவ்வாறு வெவ்வேறு காலகட்டத்தின் வரலாற்று ஆதாரங்களின் வழி நெசவுடன் தொடர்புடையதாகப் பல உட்சாதிகள் காணப்பட்டதனை அறியமுடிகின்றபோதும் பிற்கால யாழ்ப்பாணத்தில் கைக்கோளர் அல்லது செங்குந்தர், சேணியர், சாயக்காரர், சித்திரக்காரர், பறையர் எனும் சாதிக்குழுமங்களே நெசவுக் கைத்தொழிலுடன் நெருங்கியவர்களாகக் காணப்பட்டுள்ளதனை என் ஆய்வில் அறிய முடிந்தது.

**சாதிகளும் அவர்களின் கடமைகளும்**

நெசவுடன் தொடர்புடையதாகக் காணப்பட்ட ஒவ்வோர் சாதிகளினதும் கடமைகள் மற்றும் பூர்வீகங்களை நோக்குதல் எனது கட்டுரையின் இறுதிப்பகுதியினை வலுப்படுத்த உதவும் என எண்ணுகிறேன்.

அவ்வகையே கைக்கோளர்(Kaikkoa'lar) என்போர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த நெசவுக் குழுமத்தினரில் ஒருவர். கை-கோள(kai-koal) எனும் சொற்றொடர் பண்டைய தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் (பொருள்:489) பயன்படுத்தப்பட்டுள்ளது. "கை"(kai)எனின் ஒழுக்கம் - சரியான பழக்கவழக்கம் நடாத்தைகள் என தொல்காப்பியம், திருக்குறள்(84:2) போன்றன விளக்கம் தருகின்றன.[22] அதனால் கைக்கோளர் எனில் "ஒத்தவகைமையிலான பகிரப்பட்ட ஒழுக்கத்தினைப்பின்பற்றும் மக்கள் குழுமம்" என அர்த்தமளிக்கப்படுகின்றது. ஆனால் இவர்கள் தம்மை முருகனின் படை வீரர்களாகவும் "கைக்கோலர்" என்றும் "கைத்தோழர்" என்றும் அழைக்கப்பட்டதாகவும் காலப்போக்கில் மருவி "கைக்கோளர்" எனப்பட்டதாகவும் இம்மக்கள் கூறுவதோடு ஈட்டி எழுபதிலும் காணக்கூடியதாகவுள்ளது.[23]

கைக்கோளர்கள் போரற்ற காலங்களில் நெசவினையும் போர்க்காலங்களில் படைவீரர்களாகப் பங்கேற்றுள்ளனர். இதனை சோழர்காலத் தமிழ்க்கல்வெட்டுகள், செங்குந்தப் பிரபந்தத் திரட்டு ஆகியவற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.[24] சோழர் காலத்தின் பின்னர் தங்கள் குலத் தொழிலாகிய படைத் தொழிலை விட்டு நெசவுத் தொழிலைச் செய்ததோடு, சிலர் விவசாயிகளாகவும், வணிகர்களாகவும் கூட மாறியுள்ளதனை தென்னிந்திய வரலாற்றில் காணமுடிகின்றது.

"எய்தவருக்குச் சிறைசோறு மீகுவார் கைக்கோளராகிய செங்குந்தரே"[25] "செங்குந்தப் படையர் சேனைத் தலைவர் தந்து வாயர் காருகர் கைக்கோளர் என்ற சேந்தன் திவாகர நூற்பா கொண்டு செங்குந்தப் படையர், சேனைத் தலைவர், தந்துவாயார், காருகர், கைக்கோளர்"[26] எனும் செங்குந்தப் பிரபந்தத் திரட்டின் பாடலடிகளின் மூலம் கைக்கோளரினைச் "செங்குந்தர்" (Chengkunthar), காருகர்

21 "The Jaffna Dye Root Plant" *Hindu Organ*, September 30, 1915.

22 TamilNet - Know the Etymology: 135, Accessed on 09. 04. 2018.

23 *ஈட்டி எழுபது என்பது 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக்கூத்தரினால் இயற்றப்பட்டது. இது செங்குந்த குலத்தைச்சேர்ந்த மக்களைப் பற்றிய 70பாடல்களினை உள்ளடக்கியது*; TamilNet - Know the Etymology: 135, Accessed on 09. 04. 2018; *சரவண சதாசிவம், செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, 23.*

24 Ramaswamy, Textile and Weavers in Medieval South India, 14 – 15.

25 TamilNet - Know the Etymology: 135, Accessed on 09.04. 2018; புலவர் *சரவண சதாசிவம், செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, 7.*

26 *சரவண சதாசிவம், கல்வெட்டுரை, 40.*

என்றும் அழைத்துள்ளதனை அறிய முடிகின்றது. "செங்குந்தம்" எனின் இரத்தத்தால் சிவந்த ஈட்டி எனப் பொருள்படுவது போன்று நெசவுத்தறியின் முனை எனவும் பொருள்படும். ஆகவே செங்குந்தர் எனும் பெயரானது அவர்கள் பயன்படுத்திய கருவியுடன் தொடர்புபட்டதாய் உருவாகியிருக்க வேண்டும்.

செங்குந்தர் அல்லது கைக்கோளர் எனப்படும் இக் குழுமத்தினரது பூர்வீகத்தினை நோக்கின், இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தமையினையும், இந்தியத் தொடர்பினையும் காணமுடிகின்றது. இவர்கள் இந்தியாவிலிருந்து இங்கு புலம் பெயர்நதமை பற்றி பல கதைகளினை முன்வைக்கின்றனர்.

1. இந்தியாவில் வாழ்ந்த செங்குந்தர் இலங்கையை வந்தடைந்த காரணங்களில் ஒன்று, கவிச்சக்கரவர்தி கம்பன் வேளாளரை சிறப்பித்து "ஏர் எழுவது" பாடியது போல தங்கள் குலத்தவரான கல்விச்சக்கரவர்த்தி "ஒட்டக்கூத்தர் தங்கள் பெருமையை பற்றிப்பாட வேண்டும்" என செங்குந்த குலத் தலைவர்கள் பலர் ஒட்டக்கூத்தரை கேட்டபோது ஒட்டக்கூத்தர் "செங்குந்த குல குடும்பத்தின் மூத்த ஆண் வாரீசு ஆயிரத்து எண்பரின் தலையை தரவேண்டும்" என்றும் அவ்வாறு தந்தால் பாடுவேன் என்று கூற, அதற்கு பயந்த பல குடும்பங்கள் இலங்கையை நோக்கி வந்ததாகவும் அவ்வாறு மூன்று படகுகளில் வந்தவர்கள் சுழல் காற்று காரணமாக ஒன்று முல்லைத்தீவிலும், மற்றையது யாழ்ப்பாணத்திலும் மூன்றாவது மட்டக்களப்பு கல்லாற்றிற்கும் வந்து சேர்ந்ததாகவும் பின்னர் இவர்கள் தங்கள் குலத் தொழிலான நெசவு, வைத்தியம், மாந்திரீகம் போன்ற தொழில்களை செய்து வந்ததாகவும் கூறப்படுகின்றது.[27]
2. செங்குந்தர்கள் சோழர்களுடைய படைத் தளபதிகளாகவும், படை வீரர்களாகவும் விளங்கினர். சோழப் படையெடுப்பின்போது அவர்களுடனே வந்த இவர்களில் சிலர் திரும்பிச் செல்ல சிலர் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.[28] அவ்வாறு தங்கிய சிறு தொகையினர் மட்டக்களப்பின் தெற்கே கோட்டைக்கல்லாறு, ஆரையம்பதி, தாமரைக்கேணி ஆகிய இடங்களிலும் யாழ்ப்பாணத்தில் நல்லூர் இராசதானியை அண்மித்த இடங்களிலும் இற்றைவரை செறிந்து வாழ்கின்றனர்.[29]

இவ்வாறாக இவர்களது பூர்வீக வரலாற்றுக் கதைகளிற்கு மேலதிகமாக வரலாற்று ஆதாரங்களினை நோக்கின் செங்குந்தர்கள் சோழப் படைகளுடன் வந்தவர்களில் தங்கியது மட்டுமன்றி யாழ்ப்பாண இராச்சிய காலத்திலும், ஒல்லாந்த காலத்திலும் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர் என்பதனையும் அவர்களுக்கான கடமைகளும், சலுகைகளும், இருப்பிடங்களும் இருந்ததனையும் அறியமுடிகின்றது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக விளங்கிய நல்லூர் நகர் பற்றி ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கூறுமிடத்தில்..

> "நல்லூர் நகரத்திலே ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வீதியிருந்ததென்பது தெரிகின்றது. அந்தணர்க்கொரு தெருவும், செட்டிகளுக்கொரு தெருவும், வேளாளர்க்கொரு தெருவும், கன்னாருக்கொரு தெருவும், தட்டாருக்கொரு தெருவும், கைக்கோளர்க்கொரு தெருவும், சாயக்காரருக்கொரு தெருவும், உப்புவாணிகருக்கொரு தெருவும், சிவிகையார்க்கொரு தெருவுமாக இப்படி அறுபத்து நான்கு தெருக்களிருந்தன. இந்நகரத்தினுள்ளே..... அம்பட்டர், வண்ணார், பள்ளர், நளவர், பறையர், துரும்பர் முதலியோர்க்கு இருக்கையில்லை. அவரெல்லாம் புறஞ்சேரிகளிலேயே வசித்தார்கள்."[30]



27 *முகநூல், "வீரசெங்குந்தர்"*, https://www.facebook.com/VeeraSenguntharMarapu?ref=tn_tnmn, Accessed on 13.03. 2018.

28 இராசநாயகம், *யாழ்ப்பாணச் சரித்திரம்.*

29 *முகநூல், "வீரசெங்குந்தர்"*, https://www.facebook.com/VeeraSenguntharMarapu?ref=tn_tnmn, Accessed on 05.05. 2020.

30 முத்துத்தம்பிப்பிள்ளை, *யாழ்ப்பாணச்சரித்திரம், 39.*

இவ்வாறாக இவர்களது வசிப்பிடங்கள் பற்றிக் குறிப்பிடுவதற்க்கு மேலதிகமாக கனகசூரியன் காலத்துச் சிங்கைநகரின் சிறப்புப்பற்றிய குறிப்பில் யாழ்ப்பாணச்சரித்திரத்தில்

"பழைய இராஜதானி இராச வீதிகளும் அரண்மனைகளும் அவற்றைச் சூழ்ந்து குதிரைப்படை யானைப் படைக் கொட்டாரங்களும் நறுமணங்கமிழுஞ் செவ்விய மலர்ப்பொலித்திலங்குஞ் சிங்காரவனமும். பட்டாலும் பருத்தி நூலாலும் நுண்ணிய தொழில்புரி மக்களிருக்கைகளும். பலவகை அணிநலஞ் சிறந்த சாளரங்களோடு கூடிய மாளிகைகளும். தச்சர். கொல்லர். ஓவியக்காரர். தட்டார். இரத்தின வணிகர். புலவர். இசைநூல்வல்ல பாணர் இவர்களுக்கு வெவ்வேறு இருக்கைகளும். உயர்குடி வணிகர் வாழ் மாளிகை மறுகுகளும். வேதமோது மந்தணர் மந்திரங்களும். ... ... ... ... அவைகளை வேறுவேறு தெருக்களிலமைப்பித்து இந்திரன் நகரோ குபேரன் நகரோ எனக் கண்டார் வியப்புறக் கவின் பொலிந்திலங்கும் நல்லூரை நல்லூராக ஆக்கினான்"[31]

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நல்லூர் இராசதானியின் நகரமைப்பு பற்றிய குறிப்புகளிலே ஒவ்வோர் கைவினைஞனுக்கும் செய்யும் தொழில்களுக்கேற்ப வாழ்விடங்கள், தெருக்கள் தனியாக பிரிக்கப்பட்டிருந்தனை அறிய முடிகின்றது. அவ்வாறு பிரிக்கப்பட்டிருந்த வீதிகளிற்கு அவர்களது சாதியுடன், தொழிலுடன் இணைந்த பெயர்கள் புழக்கத்திலிருந்திருக்க வேண்டும். அவற்றுக்கு எடுத்துக்காட்டே இன்று எம்மிடமுள்ள சாயக்காரத்தெரு. செங்குந்தாவீதி மற்றும் தட்டாதெரு என்பனவாகும்.

இராசநாயகம் முதலியார் பெருமாள் கோவில் நிர்வாகத்தினருக்கு எழுதிய கடித்தில்

"ஐயா தமிழரசர் காலத்தில் அழைக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்த காருகவினையாளரின் சந்ததியார் சிலர் தொழில் நடாத்ததாதிருந்தபடியால் ஒல்லாந்தர் காலத்தில் சில சேணியச் செட்டிகளும். கைக்கோளரும் முற்பணம் கொடுக்கப்பட்டு வருவிக்கப்பட்டார்கள் சேணியரை வண்ணார்பண்ணையிலும் கைக்கோளரை நல்லூரிலும் இருத்தித் தேவையான நூல் கொடுத்துப் பிடவை நெய்வித்தார்கள்."[32]

இக்குறிப்பின்வழி நெசவுடன் தொடர்புற்றிருந்த இன்னொரு குழுமமான"சேணியர்"(Chea'niyar) குடியேற்றம், அவர்களது வாழ்விடம் பற்றி அறியமுடிகிறது. சமஸ்கிருதத்தில் "சேணி" எனும் சொற்றொடர் எல்லா வகைமையான கலைஞர் குழுமத்திற்கும் பொதுவானது. ஆனால் இங்கு சேணியர்களின் பரம்பரைத் தொழில் நெசவு என்பது 14ஆம் நூற்றாண்டிலான தமிழ் கல்வெட்டுகளின் மூலம் 1790களில் கிடைக்கும் ஒல்லாந்தக் குறிப்புகளின் மூலம் ஊர்ஜிதமாவதோடு இவர்கள் கம்பனிக்குக் கீழாக வேலை செய்ய வருவிக்கப்பட்டவர்கள் என்பதனையும் அறியமுடிகின்றது. இவர்கள் சேணியத் தெருவில் (பெருமாள் கோவில் வீதி) வாழ்ந்ததாகவும் இவர்கள் வர்ண ஆடைகளினை நெய்யும் குழுமத்தினர் எனவும் அறியமுடிகின்றது.[33]

சேணியர், கைக்கோளர் இருவரும் தொழில் அடிப்படையில் ஒத்திருந்தாலும் இவர்களிடையே வேறுபாடுகள் காணப்பட்டன. வழிபாட்டு அடிப்படையில் கைக்கோளர்கள் முருகனைத் தமது முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்களாக அமைய சேணியர்கள் விஷ்ணுவினை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்களாக் காணப்படுவதோடு, அன்றைய காலத்தில் மொழி வேறுபாடும் காணப்பட்டிருக்க வேண்டும். அதாவது முதல் பரம்பரையினரில் கைக்கோளர் தமிழ் பேசுபவர்களாகவும், சேணியர்கள் தெலுங்கு பேசுபவர்களாகவும் காணப்பட்டிருக்க வேண்டும் இதற்கான குறிப்புகளினை இராகவன் தனது 'இலங்கையில் தமிழ் பண்பாடு' எனும் நூலில் தருகிறார். அதுமட்டுமன்றி சேணியர்கள் பருத்தி நெசவிலும், கைக்கோளர்கள் பருத்தி. பட்டு எனம் இருவகை நெசவினைக் கைக்கொண்டிருந்துள்ளனர்[34]



31 இராசநாயகம், *யாழ்ப்பாணச் சரித்திரம்*, 76- 77.

32 இராசநாயகம் முதலியார் பெருமாள் கோவில் நிர்வாகத்திற்காக எழுதிய கடிதத்தின் பகுதி.

33 "TamilNet" accessed on 04.09.09.

34 Ragavan, *Tamil Culture in Ceylon*, 120- 121; Holmes, *Jaffna, Sri Lanka 1980*, 230- 231.

. இவ்வாறாக இவ்விரு சாதியினரும் இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களாகவும், ஒரே தொழிலைக் கைக்கொண்டவர்களாக இருந்தாலும் இவ்விரு சாதியினரும் தமக்குள் திருமண உறவினைக் கொண்டிருக்கவில்லை அத்தோடு இரு சாதியினரும் தமது குலத்தொழிலினைக் கைவிட்டு வேறு தொழில்களினைச் செய்து வந்தாலும் கோவில், சடங்குசார் வெளியில் தம்மை முன்னிலையானவர்களாக்கிக் கொள்வதில் முனைப்பாயுள்ளனர்.

கோவில், சடங்கு சார் வெளியுடன் தொடர்பற்றவர்களாகவும், ஒல்லாந்தருக்கு முற்காலத்திலிருந்து[35] 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை யாழ்ப்பாணத்தில் நெசவினைப் பயின்று வந்தவர்கள் "பறையர்" எனும் சாதியினராகும். இவர்களில் பல உட்சாதிகள் காணப்படுகின்றன. அவற்றில் 'கோலியப்பறையர்' (Koaliyap-Pa'raiyar), 'குழிக்காரப் பறையர்' (Kuzhikaarap-Pa'raiyar) எனும் இவ்விரு குழுமத்தினரும் நெசவாளிகள். அதைத்தவிர 'சாலியப் பறையர்', 'செங்குந்தப் பறையர்'[36] எனும் வகைமைகளினை காணமுடிகின்றது. இவர்களும் நெசவுடன் தொடர்புற்றிருந்திருக்கலாம், ஏனெனில் பெயர்களிலுள்ள முன்னொட்டு அவ்வாறு ஊகிக்க வைக்கின்றது. இச்சாதியின் முன்னொட்டுகளின் (Koal:loom-pole)"கோல்" எனில் தறியின் முனையையும், (Kuzhi:Pit)`"குழி" எனில் கிடங்கினை - நெசவுக் குழியினை குறிக்கும். அவ்வகையே அவர்கள் பயன்படுத்திய கருவிகள் மற்றும் நெசவின் நுட்பங்கள் அடிப்படையில் ஆகு பெயர்களாக இச்சாதிப் பெயர்கள் முகிழ்ந்துள்ளன. இவர்கள் மத்திய காலங்களின் ஆரம்ப, பிற்பகுதியில் தொழில் முறைகளின் வளர்ச்சியினால் பின்தள்ளப்பட்டனர்.

நெய்யப்பட்ட துணிகளுக்கு சாயமூட்டலிற்கு இயற்கைச் சாயமாகிய சாயவேர் பயன்படுத்தப்பட்டமைக்கேற்ப சாயவேர் கிண்டுபவர்களாக 'சாயவேர்ப் பறையர்' 'வேர்குத்திப் பள்ளர்' எனச் சில சாதிகள் காணப்பட்டன. இறுதியாக 'வண்ணார்' எனும் சாதியினரும் நெசவுடன் தொடர்புடையவர்களாகக் காணப்பட்டுள்ளதனைக் காணமுடிகின்றது. ஆரம்ப காலத்தே ஆடைகள் இயற்கைச் சாயம் இடப்பட்டமையால் சாதாரண, மத்தியதர மக்களின் ஆடைகள் மங்குபவையாகக் காணப்பட்டன. அவ்வகையே அவற்றுக்கு மீளச்சாயமேற்றலினை செய்பவர்களாக இரு பிரிப்பு வண்ணார் காணப்பட்டுள்ளனர். நீல வர்ணச் சாயமேற்றுபவர்களினை 'நீலவண்ணார்' எனவும், சிவப்பு வர்ணச்சாயம் ஏற்றுபவர்களினை 'சாயவண்ணார்' எனவும் அழைக்கப்பட்டுள்ளனர்.[37] இவர்கள் சுதேசிகளாகவே காணப்பட்டிருக்க வேண்டும் ஆனால் சாய வேர் கிண்டுதல் செய்வோர்களாகிய வேர்குத்திகள் அடிமைகளாகக் காணப்பட்டுள்ளனர்.[38] இச்சாதிகள் பற்றிய விரிவான வாசிப்பினை செய்ய நான் இங்கு முயலவில்லை.

மேலும், அக்கால நெசவுடன் தொடர்புற்றிருந்த பிற சாதியினராகிய 'சாயக்காரர்' மற்றும் 'வர்ணக்காரர்' என்போர் புதுத் துணிகள் மற்றும் நூலிற்கு சாயமிடுவோர் ஆகும். இம்மரபில் சாயக்காரர் துணிகளுக்கு நிறமூட்டலினையும் அவற்றில் அலங்கார அச்சடித்தலினையும் செய்துள்ளனர். சாயக்காரர்களோடு இணைந்து குடியேற்றப்பட்டவர்களாக 'சித்திரக்காரர்' காணப்பட்டனர். சித்திரக்காரரது குலத்தொழில் இயற்கை வர்ணங்களினைக் கொண்டு திரைச்சேலைகள் (அரண்மனை அலங்கார மேற்தட்டிகள், கோவிற்திரைகள்), சுவர் ஓவியங்கள், உடற் சாய்கை போன்றன வரைதல் ஆகும். ஆனால் சிலவிடத்தே தவறுதலாக சித்திரக்காரர்களினை "சாயக்காரர்" என அழைத்துள்ளனர். எவ்வாறிருப்பினும் இவ்விரு குழுமத்தினரும் இந்திய பூர்வீகத்தைச் சார்ந்தவர்கள். தொழிற் பெயரடிப்படையில் வெவ்வேறு சாதிப் 

35 வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, **123.**

36 வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, **116.**

37 Katiresu, *A Handbook to the Jaffna Penninsula & Souvenir of the opening the railway to the north*, 82-83.

38 Balmforth, "Surveying Lankan Chintz: Slavery, Aesthetics and Textile production in Colonial Jaffna.

பெயர்கள் இடம்பெற்றுள்ளதேயொழிய அவை மரபுப் பெயரல்ல என யாழ்ப்பாண சரித்திரத்திற்கு பின்னர் யாழ்ப்பாண வைபவகௌமுதி மெஸ். க. வேலுப்பிள்ளை அவர்களினால் வெளியிடப்பட்ட நூல் சான்றுபகிர்கின்றது. அதாவது

> "ஒல்லாந்த அரசர் காலத்தின் முன் குணபூஷசிங்கை ஆரியன் என்னுமரசன் வடதேசத்திலுள்ள மருங்கூரிலிருந்து நாயக்கரில் ஒரு குடியையும். கவறைச் சாதியரில் ஒருகுடியையும் அழைப்பித்து நல்லூரிலுள்ள கோட்டைக்குத் தென்மேற்குப் பக்கமாயிருந்த ஆவண வீதியில் குடியேற்றி வைத்தனரென்றும். அவரீர் மரபினர் எனினும் ஓர் வினைஞராயிருந்தமையின் இருபாலாரும் ஒருபாலார் போல் விளங்கினரென்றும். அவர்கள் சித்திர விசித்திரமான உடற்சாய்கை என்னம் வேலைகளை அரசர்க்குச் செய்து கொடுத்துப் பரிசு பெற்றனரென்றும். அரசர் அவைகளைக் கோவிற் திரைகளாகவும். அரண்மனையலங்கார மேற்தட்டிகளாகவும் கட்டிவந்தனரென்றும். இதற்காகவே அரசரால் இச்சாதி அழைக்கப்பட்டவரென்றும். இவரிலொருபாலார் வைகூஷ்ணவராயும். ஒருபாலார் சிவசமயிகளாகவும் இருந்ததின். இந்தியாவிலிருந்து ஓர் விட்டுணு விக்கிரகமும் ஓர் விநாயக விக்கிரகமும் இவர்கள் கைங்கரியத்தின் பொருட்டு அழைப்பிக்கப்பட்டு வந்ததென்றும். இவ்விட்டுணு விக்கிரகம் நல்லூ ரிலிருந்து பின் நாவற்குழிக்குக் கொண்டுபோகப்பட்டதென்றும்......... காலகதியில் அங்குள்ளார் பின் தம் பழம்பதியாகிய நல்லுரை நாடி ஆங்குச் சீவிப்பாராயினரென்றும் இவர்க்குரிய சாயக்காரர் என்னும் வழக்கு. தொழிற்பெயரன்றி மரபுப் பெயரன்றென்றும். இவர் மரபு நாயக்க. கவறையே என்றும். பறங்கி அரசர் காலத்தில் நல்லூரிலேயே பிரபல கீர்த்தி பெற்று விளங்கிய கோபாலு நாய்க்கர் என்னும் பண்டிதரால் தாலபத்திரத்தில் கரலிபியில் எழுதப்பட்ட "யாழ்ப்பாணவிபவம்" என்னும் பிரதி சாட்சியிடுகின்றது."[39]

மேலும்

> "இவர்களில் இரண்டு வகை மரபினர் உள்ளனர். 1. கவறை மரபு 2. நாயக்க மரபு. கவறை மரபினர் சாயக்காரராகவும். நாயக்க மரபினர் ஓவியர்களாகவும் இருந்தனர் (கோயில் திரைச்சீலை. சுவர்ஓவியங்கள் சித்திர விசித்திர வேலைகள் செய்பவர்கள்) கவறை மரபினர் ஆரிய குளப்பகுதியிலும் ஆனைக்கோட்டைப் பகுதியிலும் நாயக்கர் மரபினர் நல்லூரப் பகுதியிலும் குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கிடையே உள்ள தொழில் ஒற்றுமை காரணமாக (சாயமிடல் - சாயமிட்ட துணியில் ஓவியம் தீட்டல்) இவர்களுக்கிடையில் திருமணக்கலப்பும். தொழிற்கலப்பும் ஏற்பட்டுள்ளது. இன்று பருத்தித்துறையில் சாயக்காரர் எனப்படுவோர் இவ்விரண்டு மரபின் கலப்பினராவார்."[40]

இவ்வாறாக இவர்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப்பட்ட இடங்கள், அவர்களிடையேயான திருமண பந்தங்கள் போன்றவற்றினை அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்த நெசவுத் தொழிலானது ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு உற்பத்தி நகர்தல், தொடர்தல் என ஓர் படிமுறை ரீதியான தங்கியிருத்தலை வேண்டினாலும் இத்தொழில்களில் ஈடுபட்ட சாதிக் குழுமங்களுக்குள் பெரிதளவில் உற்பத்தித் தொடர்பைத் தாண்டி எந்த உறவினையும் பேணியதைக் காணமுடியவில்லை. இவர்களுக்குள்ளே பாரியளவிலான ஏற்றத் தாழ்வுகளினையும், வேறுபட்ட கட்டுப்பாடுகளினையும் காணமுடிகின்றது. இதற்கு புதிய தேசவழமைச்சட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.[41] இத் தேசவழமைச் சட்டத்தில் சாயமிடுபவர்கள், சாயவேர் பிடுங்குபவர்கள் மீது சில கட்டளைகள் வழியான சட்டங்கள் நிறுவப்பட்டிருந்தாலும் அங்கு நெசவு சார் சாதியினர், சித்திரக்காரர்கள் பற்றிய சட்டங்களினைக் காணமுடியவில்லை. அதேபோன்று கைக்கோளருக்கும், சேணியருக்கும், சித்திரக்காரருக்கும் கிடைத்த சடங்குசார் வெளியிலான அங்கீகாரம் மற்றையவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவ்வகையே இச்சாதிக் குழுமங்கள் ஒரே மாதிரியாகச் சமூகத்தில் கணிக்கப்படுதலினை வரலாற்றுப்போக்கிலும் இன்றும் காணமுடியவில்லை.



39 வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, **189 - 190.**

40 இரகுவரன், *பருத்தித்துறையூராம்*, **245 - 246.**

41 Mutukisna, *A new edition of the Thesawalama or the lawas of customs of tradition*, 690 – 691.

**சாதி அடையாளம்: கண்டுபிடிப்பும் அழிப்பும்**

யாழ்ப்பாண இராசதானிக் காலம், ஒல்லாந்த காலங்களில் நெசவுக்கும் அது சார் உற்பத்திக்கும் கிடைத்த வரவேற்பு பிரித்தானிய காலங்களில் குறைந்து போகின்றது. அதாவது கைத்தொழிற் புரட்சியால் பெருவாரியான ஆலையுற்பத்தி துணிகளின் வருகையோடு சந்தையில் போட்டியிட்டு நின்று நிலைக்கமுடியாமை, நாடுமுழுவதும் பொதுவானதொரு பாடத்திட்டத்தின் கீழ் நெசவு பாடசாலைகள் இயங்கியமை, அரச, மத மற்றும் சமூக நிறுவனங்களின் தலையீடு, உள்ளூர் நெசவாளர்களிடம் காணப்பட்ட தொழிநுட்பக் குறைபாடு[42] மற்றும் சாதி சார் அடையாளமாக இத்தொழில் காணப்பட்டமை ஆகியவற்றாலே சேணியர் மற்றும் கைக்கோளர் தமது மரபார்ந்த குலத் தொழிலாகிய நெசவினைக் கைவிடுதல் நிகழ்ந்திருக்கவேண்டும். அதேபோன்ற நிலபரமே நெசவுடன் தொடர்புடையதான தொழில்களான சாயவேர் கிண்டுதல் மற்றும் சாயமிடலுக்கும் நிகழ்ந்துள்ளது. இயற்கைச் சாயத்தினைப் பெறுதலிற்கான செயற்பாடு நீண்டதும், அதிக மனித உழைப்பை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும். ஆனால் ஜேர்மனியிலிருந்து அறிமுகமான இரசாயனச் சாயங்களின் நீடிப்புத்தன்மை மற்றும் இலகுவான செயன்முறை சாய வேர் கிண்டுதலினையும், அச்செயற்பாட்டின் தேவைப்பாட்டினையும் மழுக்கடித்தது.

யாழ்ப்பாணத்தில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரை நெசவுப் பயில்வினைப் பேணி வந்த இறுதிச் சாதியினராகிய பறையரிடமிருந்த எச்சசொச்சங்களும் யுத்தத்துக்குப் பின்னான பொருளாதார நெருக்கீடு, அரசின் ஊக்குவிப்பு இன்மை, சாதி ரீதியான குறிகாட்டியாக இத்தொழில் காணப்பட்டமை இவற்றினால் கைவிடப்பட்டது. இன்று நெசவுத் தொழிலானது எந்தச் சாதிக்கும் உரியதாக வரையறுக்கப்படாது அரசின் கீழான ஒரு கைத்தொழிற் துறையாகவே மாறியுள்ளது. தொழிற்பயில்வினைக் கைவிட்ட போதிலும் நெசவு சார் குழுமத்தினர் தாம் பண்டைய காலங்களில் தொழிலடிப்படையில் ஆற்றி வந்த சில சடங்குகள், கடமைகள், பெற்றுக்கொண்ட உரிமைகளினை விட்டுக் கொடுக்காது பயில்வதனையும், சிலவிடத்தே பழையனவற்றினை மறப்பதனையும், மறைப்பதனையும் காணமுடிகின்றது.


தானங்களில் சிறந்ததானமாகிய வஸ்துதானத்தைப் பரம்பரை பரம்பரையாகச் செய்துவந்த சாதியினராகிய செங்குந்தர்கள் அல்லது கைக்கோளரது வழித்தோன்றல்கள் இன்றும் கல்வியங்காட்டிலும், கரவெட்டியிலும் வாழ்ந்து வருகின்றனர். முன்னைய காலத்தில் இவர்களது மூதாதையர்கள் நெசவினைக் குலத் தொழிலாகக் கொண்டிருந்தபோது கோயில்களின் மகோற்சவங்களிற்கான கொடிச்சீலை மற்றும் கொடிக் கயிறு வழங்குதல் இவர்களின் கடமையாகவிருந்துள்ளது. புதுத் துணியினைக் கொடிச் சீலையாக நெய்து அதில் இயற்கைச் சாயத்தால் தெய்வ உருவினை வரைந்து திருவிழாவிற்கு முதல் நாள் ஆலயப் பிரதம குருக்களிடம் கையளித்தலும், கொடியேற்ற உபயகாரர்களாக காணப்பட்டமையும் யாழ்ப்பாணத்தின் பல ஆலயங்களின் வழக்கமாக இருந்துள்ளது. இதன் தொடர்ச்சியாகவே இன்றும் யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார், இருபாலை வயல்வெளிக் கந்தசுவாமி கோவில், வேளாதோப்பு அம்மன் கோவில், கல்வியங்காடு பூதவராயர் சிவன் கோவில், சிவஞானப்பிள்ளையார் கோயில், சந்திரசேகரப் பிள்ளையார் கோயில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில், கரவெட்டி யாக்கரைப் பிள்ளையார் கோவில், பருத்தித்துறை பசுபதீஸ்வரர் கோவில், நுணாவில் பிள்ளையார் கோவில், பண்டாரிக்குளம் பிள்ளையார் கோயில், வேளாதோப்பு அம்மன் கோவில் ஆகியவற்றில் இம்மரபு தொடரப்படுகின்றது.[43]



---

42 *சனாதனன், நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் (1920- 1990), 32.*

43 *முகநூல், "வீர செங்குந்தர் மரபு",* https://www.facebook.com/VeeraSenguntharMarapu?ref=tn_tnmn. Accessed on 02.04. 2018.



*படம். 01: காளாஞ்சியினையும், மகோற்சவப் பத்திரிகையினையும் செங்குந்த மூத்த பரம்பரையினரிடம் வழங்குவதற்காக நல்லூர் ஆலயப் பிரதமகுரு எடுத்துச் செல்லல். மூலம்: வீரசெங்குந்தர் முகநூல்*

கல்வியங்காட்டில் வாழும் கைக்கோளர்களே நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழாவிற்கான கொடிச்சீலையினை இன்றும் வழங்கி வருகின்றனர். நல்லூர் கந்தசாமி கோயிலின் ஒவ்வொரு வருட மகோற்சவத்தின் முன்னர் ஆலயப் பிரதம குரு கொடிச்சீலை வழங்கும் கைக்கோள சந்ததியினரின் மூத்த பரம்பரையினரின் வீட்டிற்குச் சென்று மகோற்சவத்திற்கான முதலாவது காளாஞ்சியினையும், மகோற்சவப் பத்திரிகையினையையும் அவர்களது மூத்த பரம்பரை உறுப்பினரிடம் வழங்குவார் (*படம்.1*). காளாஞ்சியினைப் பெற்றுக்கொள்ளும் பரம்பரையினர் திருவிழாவிற்கு முதல் நாள் கொடிச்சீலையையும், கொடிக் கயிறினையும் சிறிய தேரில் வைத்து வேல்மடம் முருகன் ஆலயத்திலிருந்து மேள தாளத்துடன் எடுத்துச் சென்று நல்லூர் ஆலயப் பிரதம குருவிடம் கையளிப்பதோடு (*படம்.2*), இறுதி நாள் நிகழும் வள்ளி கல்யாணத்திற்கான பந்தற்கால் நாட்டுதல் சடங்கிலும் பங்குகொள்கின்றனர்.[44]


> "எந்தக் கோயில்களுக்கும் கொடிச்சீலை மிகவும் புனிதமாகவும். தாம்பாளத்தில் வைத்து உபயகாரரால் தலையில் சுமந்துகொண்டு மங்கள வாத்தியம் முழங்க கோவிலைச் சென்றடையும் ஆனால் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குக் கொடுக்கும் கொடிச்சீலை இப்படி சர்வ சாதாரணமாக கொண்டு செல்லப்படுவதில்லை. இக் கொடிச்சீலையைக் கொடுக்கும் செங்குந்த மரபினர் தங்களுக்கியன்ற பொருளுதவி கொடுத்துச் செய்யப்பட்ட ஒரு சிறு தேரில் ஏற்றிக் கொடியேற்றும் நாளுக்கு முதல் நாள் காலையே மங்கள வாத்தியத்துடன் கோவில் முன்றலை இத்தேர் வந்தடையும் தேரிலிருந்து கொடிச்சீலையை உபயகாரராகிய செங்குந்தப் பெருமகன் தலையில் சுமந்தது சென்று கோவில் பிரதம குருக்களிடம் கையளிப்பார்...இச்சிறிய தேர் கொன்றலடி வைரவர் கோவிலுக்கண்மித்திருக்கும் வேல்மடம் முருகன் ஆலயத்திலிருந்தே வருடாவருடம் புறப்படும்."[45]

இவ்வாறாக மரபினை இன்றும் பின்பற்றும் இச்சாதியினர் நெசவினைக் கைவிட்டுள்ள நிலையில் கொடிச்சீலையினை நெய்வதற்குப் பதிலாக இவர்கள் வெள்ளைப் பருத்தித்துணியினை கடையில் வாங்கி அதனைத் தூய்மைப்படுத்தி 24 முழம் கொண்ட புதிய கொடிச்சீலையினைத் தயாரித்து, இயற்கைச் சாயத்திற்குப் பதிலாகக் காவி கொண்டு முருகனின் இலச்சினையாகிய வேலும் மயிலினை வரைந்து அதனையே கொடிச்சீலையாகக் கையளித்து வருகின்றனர். இவ்விரு இலச்சினைகளும் கைக்கோளர்கள் தமது குலத்திற்கெனத் தனித்துவமாகப் பேணப்படும் கொடியிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



44 நேர்காணல், *தர்மராஜா, கட்டுரையாளனால் நேர்காணப்பட்டது*, 01. 05. 2018.

45 *செங்குந்தரும் கொடிச்சீலை கொடுக்கும் வரலாறு*, **10.**

*படம். 02: கொடச்சீலை, கொடிக்கயிறு செங்குந்த மூத்த பரம்பரையினரின் வீட்டிலிருந்து வேல்மடம் முருகள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லும் காட்சி, அங்கிருந்து நல்லூருக்கு கொடிக்கயிறு தேரில் எடுத்துச் செல்லும் காட்சி. மூலம்: வீரசெங்குந்தர் முகநூல்*

தற்போது இதனை வரைவிப்பதற்காகத் தச்சர்களின் உதவியை நாடுகின்றனர். அதே போன்று கொடிக்கயிறும் முன்னர் இந்தியாவிலிருந்து பெற்று வந்தனர் ஆனால் தற்போது அதனையும் யாழ்ப்பாணத்திலேயே வாங்குகிறார்கள். இவ்வாறாக இன்று தொழிற்பயில்வு அற்ற இச்சாதியினர் கோயிற் சடங்குடன் தொடர்புறுவதும், தம் மேனிலை அடையாளத்தினை வெளிக்காட்டத்தக்கதுமான இவ்வழக்கங்களினை சில தொன்மங்கள், நம்பிக்கைகளுடன்[46] பிணைத்துக் கூறுவதூடாக தமது சிறப்புரிமைகளாக அவற்றைத் தொடர்ந்து பேண முயல்கின்றனர். ஒவ்வொரு கைவினைச் சாதியும் தங்களது தொழில் இறைவனால் கொடுக்கப்பட்டதாகவும், மதிக்கப்பட்டதாகவும், ஒருகாலத்தில் உயர்வாக இருந்ததாகவும் தங்கள் தொன்மங்கள் மூலம் இப்போதைய சாதிய வாழ்வின் நெருக்கடிகளுக்கு மன அளவிலான ஆறுதல் காண்கின்றனர். லெவிஸ்டாசின் கூற்றுப்படி மக்களின் நெருக்கடிகளை சொல்லாடல் செய்யும் களமாகவே தொன்மங்கள் திகழ்கின்றன[47] என்பதைக் கவனத்தில் கொள்ளலாம்.

செங்குந்தர்கள் எவ்வாறு கோவில் மற்றும் அதுசார் சடங்கு வெளியில் முதன்மை பெற்றுள்ளனர் என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டே நல்லூர் கந்தசுவாமி கோவிலின் சூரன் போரின் போது இவர்கள் நவவீரர்களாகப் பங்குபற்றுதல் ஆகும். இவ்வழக்கம் நான்கு தலைமுறைகளாக இன்றும் தொடரப்படுகின்றது. செங்குந்தர்கள் முருகனின் தாயான பார்வதியின் சிலம்பில் இருந்த ஒன்பது இரத்தினங்களிலிருந்து பிறந்தவர்கள் எனும் தொன்மத்தின் அடிப்படையில் திருச்செந்தூர் சூரசம்ஹாரத்தின் பொழுது ஒன்பது செங்குந்த வீரர்கள் வீரபாகுத் தளபதிகளாய் வேடமணிந்து சென்று முருகன் சூரனை சம்ஹரிக்க உதவுவது இன்றும் நடைமுறையில் உண்டு. அதேபோன்ற வழக்கமாக செங்குந்த முடிபோடல் இங்கும் தொடரப்படுகிறது.[48] நல்லூர் கந்தசுவாமி கோவிலில் (*படம். 3*) மட்டுமன்றி மற்றும் இவர்கள்

46 உமாபதி சிவாச்சாரியாரியார் 'கொடிக்கவி' பாடியதுடன் இணைந்த நிகழ்வுகளினை இதனுடனான ஜதீகமாகக் கூறுகின்றனர், அத்தோடு சந்தான பாக்கியம் வேண்டி முருகனிடம் நேர்த்தி வைக்கப்பட்டதாகவும் , நேர்த்திக் கடனைத் தீர்க்கும் பொருட்டு கொடிக்கயிறு மற்றும் கொடிச்சீலையை வழங்கும் மரபு உருவானதாகவும் குறிப்பிடப்படுகின்றது.
*பார்க்க:* https://senguntharmudaliarhistory.blogspot.com/2019/05/1.html, accessed on 04.09.2019.

47 *லெவிஸ்ட்ராஸ் மேற்கோள், பக்தவத்சலபாரதி, தமிழர் மானிடவியல், **321**.*

48 சூரன்போரன்று செங்குந்தர்கள் நவவீரர்களாக வேடமணிந்து கொண்டலடி வைரவர் ஆலயத்திலிருந்து நல்லூரிற்கு சென்று முருகனின் படைவீரர்களாக பங்குபற்றுவர். இவ்வாறு வேடம் அணியும்போது அணியப்படும் ஆடையே முள்ளியவளையில் இடம்பெறும் கோவலன் கூத்திலும் அணிவர். அக்கூத்தானது இன்றும் முள்ளியவளையிலுள்ள கைக்குள சாதியினரிடம் பயில்வில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொடிச்சீலை வழங்கும் முருகன் ஆலயங்களில் இவ்வழக்கு தொடரப்படுகின்றது. சாதி அடையாளத்தினை மறைப்பதற்காக தொழிற் பயில்வினைக் கைவிட்ட இவர்கள் இச்சடங்குகளின் பயில்வினை விட்டுக் கொடுக்காது பேணுவதன் வழி மீண்டும் அடையாளத்தினை காட்ட முயல்கின்றனரா? அல்லது அவற்றினைத் தமக்கான ஓர் சிறப்புரிமையாகக் கைக்கொள்ள விரும்புகின்றனரா? எனும் வினா கவனிக்கத்தக்கது.







*படம். 03: சூரன்போரின்போது நவவீரர்களாகச் செங்குந்தர் பங்குபற்றுதல். மூலம்: வீரசெங்குந்தர் முகநூல்.*

கோயிற்சடங்குகள் தவிர இவர்கள் வாழும் பகுதிகளில் இவர்களது இருப்பின் எச்சங்களாக சில இடங்களின் பெயர்களை அடையாளம் காணமுடிகின்றது. கல்வியங்காட்டில் இன்றும் செங்குந்தர்கள் வாழும் பிராந்தியத்தில் உள்ள ஒரு வீதி 'செங்குந்தா வீதி' (*படம்.4*) என இவர்களது சாதிப் பெயருடன் இணைத்து அழைக்கப்படுகிறது. இவ்வீதி முன்பு 'செங்குந்தர் வீதி' என்றே அழைக்கப்பட்டுள்ளது பின்னர் மருவிச் 'செங்குந்தா வீதி' ஆகியுள்ளதனை அறிய முடிகின்றது. இதேபோன்று கரவெட்டியிலும் இச்சாதியினர் வாழ்வதற்கேற்ப அங்கும் 'செங்குந்தர் வீதி' என ஓர் வீதியுள்ளது. இதனைத் தவிர கரவெட்டியில் இவர்களது சாதியினரில் பொறுப்பில் 'செங்குந்தா சனசமூக நிலையம் (*படம்.5*) என ஓர் சனசமூக நிலையம் தற்போதும் இயங்கி வருகின்றமையினையும் காணலாம்.

இன்று கல்வியங்காட்டுச் சந்தையாகச் சொல்லப்படும் சந்தை காலனியகால ஆவணங்களிலுள்ள சந்தை வகைப்பாட்டின் பெயரிடலில் 'கைக்குளச் சந்தை' என அழைக்கப்பட்டுள்ளதனையும் அதன் பின்னர் இச்சந்தை 'செங்குந்தர் சந்தை' என்று அழைக்கப்பட்டுள்ளமையினையும் தற்போது 'செங்குந்தாச் சந்தை' (*படம்.6*), கல்வியங்காட்டுச் சந்தை என மருவி வந்துள்ளதனையும் காணலாம். இச் செங்குந்தாச் சந்தைக்கு முன்புறமாக அமையப் பெற்ற செங்குந்தா வீதியில் சுமார் 100 யார் தொலைவில் கொன்றலடி வைரவர் ஆலயத்திற்கு சொந்தமான பண்டாரி வளவில் அமைந்துள்ள கல்லூரியின் பெயர் "செங்குந்தா இந்துக்கல்லூரி" (*படம்.7*) ஆகும்.

> "இக்கல்லூரியின் உருவாக்கம் பற்றி நோக்கின் நல்லூர் இராஜதானி சூழவுள்ள பகுதிகளில் பெருமளவு வசித்த செங்குந்த மக்களும் சைவப் பெருங்குடிமக்களும் தமது மக்களுக்கு சைவ சூழலில் கல்வி புகட்ட முடியாத நிலையை எண்ணி மனம் நொந்து இருந்த வேளை பிரபல சோதிட நிபுணரும் செங்குந்த குல திலகமுமான கொண்டலடி வைரவ சுவாமிகள் கோவில் தர்மகர்தாவுமாகிய உயர் திரு சண்முகம் இளையதம்பி என்பவரது பராமரிப்பில் இருந்த கோவிலுக்குச் சொந்தமான பண்டாரிவளவு என்று அழைக்கப்பட்ட காணியில் 1932 காலப்பகுதில் கந்தவாச மண்டபம் (சங்கமடம்) அமைக்கப்பட்டது. இதுவே செங்குந்த இந்துக் கல்லூரியின் ஆரம்பம் ஆகும். இது முதலில் செங்குந்த மகாசபை நிகழ்சிகள் நடாத்தப் பயன்படுத்தப்பட்டது பின்னர் சைவவித்தியா விருத்தி சபையுடன் இணைந்து வழக்கறிஞர் இந்துபோர்ட் இராசரத்தினம் பெரியாரினால் 1934ஆம் ஆண்டு



*படம். 04 (வலது): செங்குந்தா வீதி, யாழ்ப்பாணம்.*

*படம். 05 (இடது): செங்குந்தா சனசமூக நிலையம், கரவெட்டி.*

> "செங்குந்த இந்துக் கல்லூரி"[49] இரு மொழிப்பாடசாலையாகவும். சைவப்பிள்ளைகள் அனைவரும் கற்பதற்கான பாடசாலையாகவும் ஆரம்பிக்கப்பட்டது."[50]

மேலும் இவர்களது சாதிப் பெயரில் இரு பாடசாலைகளின் பெயர்கள் காணப்பட்டதனை அறியக்கூடியதாக உள்ளது. "கைக்குல சி. சி ஆண்கள் பாடசாலை" மற்றும் "கைக்குல சி. சி பெண்கள் பாடசாலை" இவ்விரு பாடசாலைகளும் 1970கள் காலத்தில் நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், நல்லூர் ஞானோதயா வித்தியாலயம் என முறையே பெயர் மாற்றப்பட்டுள்ளன.[51] இதற்க்கு 1970கள் முன்னர் செங்குந்தப் பாடசாலையில் கற்ற பழைய மாணவர்களின் விடுகைப் பத்திரங்கள் சான்று பகிர்கின்றன. இவ்விரு பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியை முடித்தவர்களே செங்குந்த இந்துக் கல்லூரியில் இணைபவர்களாகக் காணப்பட்டனர். ஆரம்பத்தில் செங்குந்த இந்துக் கல்லூரியின் காணி மற்றும் உருவாக்கபட்ட நோக்கம் ஆகியவற்றுக்கும் செங்குந்தர்களுக்குமான தொடர்பு காணப்பட்டாலும் தற்போது எல்லோரும் கற்பதற்கான ஓர் பாடசாலையாகக் காணப்படுகின்றதோடு பெயரளவில் மாத்திரம் இவர்களின் சாதி அடையாளத்தினைக் கொண்டுள்ளது.

இவற்றினைத் தவிர செங்குந்தாப் பாடசாலையில் 'ஒட்டக்கூத்தர் மடம்' காணப்பட்டுள்ளதோடு 'ஒட்டக்கூத்தர்விழா'வும் கொண்டாடப்பட்டுள்ளது. இவ்விழாக்கள் இன்று கொண்டாடப்படுவதில்லை. இதனை பழைய மாணவர் ஒருவரின் நேர்காணல் மூலம் அறிய முடிந்தது.[52] அதேபோன்று கல்வியங்காட்டுப் பிராந்தியத்தில் ஒட்டக்கூத்தர் வளவு மற்றும் அவர் பெயரில் சொத்துக்களும் காணப்பட்டுள்ளன. கைக்கோளர் தம்மைச் சிறப்பித்து கவிபாடிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரினை

---

49 ஆரம்பித்த போது "செங்குந்த தமிழ் கலவன் பாடசாலை" என்றே பெயரிடப்பட்டது பின்னர் "செங்குந்த இந்து ஆங்கிலப் பாடசாலையாக" பெயர் மாற்றம் கண்டு தற்போது "செங்குந்த இந்துக் கல்லூரி" எனப்படுகின்றது.

50 செங்குந்த கைக்கோள முதலியார் சரித்திரம்ஃஞநபெரனொய முயமைழடயஇ "இலங்கை செங்குந்த இந்துக் கல்லூரி", https://senguntharmudaliarhistory.blogspot.com/2020/11/Jaffna%20senguntha%20hindu%20college.html. Accessed on 08.04. 2020; "About us", Senguntha Hindu College school website. http://web.archive.org/web/20151121171756/http://www.shcthiru.sch.lk/About-1.htm. Accessed on 11. 01. 2019.

51 நேர்காணல், தர்மராஜா, கட்டுரையாளனால் நேர்காணப்பட்டது, *01. 05. 2018.*

52 நேர்காணல், தர்மராஜா, கட்டுரையாளனால் நேர்காணப்பட்டது, *01. 05. 2018.*







*படம். 06 (வலது): செங்குந்தாச் சந்தை, யாழ்ப்பாணம்.*


*படம். 07 (இடது): செங்குந்த இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

எவ்வாறு மதிப்பளித்துள்ளனர் என அறிய முடிகின்றது.

செங்குந்தர்கள் தம் அடையாளத்தினை கோவில் முன்னிலைப்படுத்துவதனைத் தவிர சமூக வலைத்தளங்களிலும் தம் சாதி அடையாளத்தினையும், பெருமையினையும் வெளிப்படுத்துகின்றனர். 'வீர செங்குந்த மரபு', 'செங்குந்தர் கைக்கோள முதலியார் வரலாறு' போன்ற முகப் புத்தகங்கள் திறந்து அதில் இந்தியா, இலங்கை மற்றும் புலம்பெயர் தேசங்களிலுள்ள செங்குந்தர்கள் உறுப்பினர்களாகவுள்ளனர். இம்முகப்புத்தகம் எனும் பொதுவெளியில் "நானும் ஒரு செங்குந்தர்" எனத் தம் சாதி அடையாளத்தைப் பெருமையாக வெளிப்படுத்துகின்றனர். அத்தோடு இந்தியாவின் வேரோடுள்ள தொடர்பினைப் பேண 'செங்குந்தா முதலியார் சங்கம்', 'செங்குந்தா மகாஜன சங்கம்' போன்ற சங்கங்களின் உருவாக்கி இலங்கையின் மற்றைய பாகங்கள், இந்தியா போன்ற இடங்களில் உள்ள செங்குந்தர்களுடன் கூட்டுறவினையும், தொடர்பினையும் பேணுகின்றனர்.

இவ்வாறு ஒருபுறம் செங்குந்தர்களது அடையாளங்கள் பேணப்பட்டாலும், மறுபுறம் தமது அடையாளங்களாகக் காணப்பட்ட சிலவற்றினை மருவிப்போதலில் கவனம் கொள்ளாமையினையும், உரிமைகளினை இழந்துள்ளமையினையும் காணலாம். எடுத்துக்காட்டாக, இவர்களிற்கு உரித்தானதாகக் காணப்பட்ட சட்டநாதர் சிவன் கோவில் மற்றும் வாலையம்மன் கோவில் போன்ற ஆலயங்கள் இன்று இச்சாதிகளிடமிருந்து கைமாற்றப்பட்டுள்ளன. இவ்விரு ஆலயங்களும் இச்சாதியினர் வாழும் இடங்களின் முக்கிய எல்லை ஆலயங்களாகும். ஆனால் இவர்களின் ஒற்றுமையின்மை, பிறசாதித் திருமணக் கலப்பு மற்றும் கவனக் குறைவால் உரிமை கைமாறிய பின்னர் உரிமைக்காக வாதாடி வருகின்றனர். கரவெட்டி யாக்கரைப் பிள்ளையார் கோவிலும் இதில் குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி பூதநாத சுவாமி தேவஸ்தானம், கல்வியங்காடு வெள்ளைப்பிள்ளையார் ஆலயம், கொன்றலடி வைரவர், சிவஞானப்பிள்ளையார் போன்ற சில ஆலயங்கள் இன்றும் இவர்களது பரம்பரை ஆலயங்களாக உள்ளன. அத்தோடு கல்வியங்காட்டினை அடுத்ததாக உள்ள சந்தி இன்றும் 'முத்திரைச் சந்தி' எனும் பெயரில் அழைக்கப்படுகின்றது. முத்திரைச் சந்தி எனும் பெயர் வரக்காரணம் பற்றி நோக்கும்போது ஒல்லாந்த காலத்தில் உள்ளூரில் நெய்யப்பட்ட சேலைகளுக்கு வரி அறவிடப்பட்டதாகவும் அச்சீலைக்கு முத்திரை குத்தினவிடமே முத்திரைச்சந்தை எனப்பட்டது" என யாழ்ப்பாண வரலாறு பற்றிக் கூறும்

நூல்கள்[53] சான்று பகிர்கின்றன. இவ்வகையே கல்வியங்காடு அதனை அண்மித்த பகுதியிலுள்ள அவர்களது ஆலயங்கள், எச்சமான அடையாளங்களினை தொகுத்து நோக்கும்போது எவ்வாறு அன்றைய காலம் இப்பகுதி ஒரு நெசவுதொழில் செய்வோரின் பிராந்தியமாக இருந்திருக்குமென கற்பனை செய்யமுடிகின்றது (*படம்.08*).



*படம். 08: நெசவுடன் தொடர்புடையவர்கள் வாழுமிடம், தொடர்புற்ற இடங்கள் மற்றும் அவர்களது பரிபாலிக்கும் ஆலயங்கள் உள்ள பிரதேசம்.*

யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒரு பெருஞ்சாதிக் குழுவில் வேறுபட்ட சமூக அடுக்கமைவைக் கொண்ட உட்சாதிகள் காணப்பட்டன. இந்நிலையில் தனிச் சாதியாகக் காணப்பட்ட கைக்கோளர் அல்லது செங்குந்தர் இன்று திருமண உறவின் மூலம் இவர்கள் மேலுள்ள சாதிக்குள் நகர்தல் மற்றும் கீழுள்ள சாதிக்குள் நகர்தல் எனும் இரண்டுக்குமான விளிம்பில் உள்ளனர். தம்மைவிட அடுக்கில் குறைவானவர்களினையும் திருமணம் முடித்துக் கொள்கின்றனர் இதனால் சாதியினால் மாற்றமடைகின்றனர். அதேவேளை திருமணத் தேவைகளின்போது பெரிதளவில் தம்மை கைக்கோளராகவோ/ செங்குந்தராகவோ காட்டிக் கொள்ளாது வெள்ளாளர் எனத் தம்மை அடையாளப்படுத்த முயல்கின்றனர். இதனால் கைக்கோளர் அல்லது செங்குந்த சாதிக்குள் வெள்ளாள சாதிக்கலப்பு நிகழ்வதனையும் இவர்கள் இன்னோர் சாதிக்குரியவராதலும் நிகழ்கின்றது மறுபுறம் வெள்ளாள மேநிலை உள்ள யாழ்ப்பாண சமூகத்தில் அது வேறுவிதமான ஓர் சிக்கல்தனத்தினை அவர்களுக்குள்ளேயே உருவாக்குகின்றது. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு வாலையம்மன் கோவிலின் உரிமை மாற்றம்.

நெசவுடன் தொடர்புடைய கைக்கோளரின் அடையாளம் பற்றிய நிலைப்பாடு இவ்வாறு காணப்பட சேணியர்களினை நோக்கின், அவர்கள் தமது எச்சங்களினை முழுதாக மாற்றியமைத்துள்ளனர் என்றே கூறலாம். 'பெருமாள் கோவிலடி' என இன்று அழைக்கப்படுமிடம் இத்தெரு முன்னர் சேணியர்களினை குடியமர்த்தி அவர்களின் வாழ்விடமாகக் காணப்பட்டமைக்கேற்ப 'சேணியத்தெரு' என்றே அழைக்கப்பட்டுள்ளது ஆனால் இன்று இப்பெயர் புழக்கத்திலில்லை. அதேபோல் ஒல்லாந்த காலத்தில் குடியமர்த்தப்பட்ட சேணியர்கள் வைகூஷ்ணவர்களாகக் காணப்பட்டமைக்கேற்ப இவர்களது வழிபாட்டுக்காக சிறப்புரிமையாக காலனிய காலத்தில் அமைக்கப்பட்ட பெருமாள் கோவில் இன்று வளர்ந்து பெரும் ஆலயமாக வடிவெடுத்துள்ளது. இதன் வழிபாடு மற்றும் உரிமை சேணியர்களுக்கு மட்டும் உரித்தானதாகக் காணப்பட்டாலும் இன்று அனைத்து சமூகமும் வழிபடுவதற்கான ஆலயமாகக அனுமதியளிக்கப்பட்டுள்ளது ஆனால் ஆலயத்தின் மூத்த நிர்வாக உறுப்பினர்களாக சேணியர்கள்



---

53 வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, 138; இராசநாயகம், *யாழ்ப்பாணச்சரித்திரம்*, 04.

வழிவந்தவர்களே காணப்படுகின்றனர். இவர்கள் தம்மைச் சேணியச் செட்டிகளாக யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் கைக்கோளரினை விட மேலானவர்களாகச் செட்டிகளாகவும் அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால் இவர்கள் காலனியத்தின் போது அடிமைகளாக நெசவுத் தொழிலுக்காக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டவர்கள் என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

நெசவுடன் உபசெயற்பாடுகளுடன் தொடர்புடைய சாதியினராகிய சாயக்காரர், சித்திரக்காரர்களுக்கு என்ன நிகழ்ந்தது என நோக்கின், ஆனைக்கோட்டையிலும் பருத்தித்துறையிலும் அவர்கள் குடியமர்த்தப்பட்டனர் என்பதற்கேற்ப பருத்தித்துறையில் அவர்கள் குடியமர்த்தப்பட்ட இடத்தில் இன்றும் 'சாயக்காரத்தெரு'[54] எனும் ஒரு தெருவின் பெயர் வழக்கில் காணப்பட்டாலும், இவர்களோடு தொடர்புடைய சித்திரக்காரர்[55] வாழ்ந்த நல்லூரில் இவ்வாறான அடையாளங்கள் இன்று வழக்கில் மறைக்கப்பட்டுள்ளன. ஆனால் நல்லூர் இராசதானி பற்றிய குறிப்பில் தென்கிழக்குப் பிராந்தியத்தினில் கைவினைஞர்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் ஓர் தெரு 'சாயக்காரத் தெரு' என அறியப்பட்டுள்ளது. அத்தோடு வாய்மொழித் தகவல்கள் மூலமும் அறிய முடிகிறது. சாயக்காரத் தெருவில் காணப்பட்ட ஓர் ஆலயம் 'சாயக்காரப் பிள்ளையார்' என அறியப்பட்டது. ஆனால் இன்று இவ்வாலயம் "மூத்தவிநாயகர் கோவில்" எனும் பெயருடனே அறியப்படுகிறது.

"இந்திய மருகூர்தன்னி லிருந்தொரே வினைஞராகி
வந்தவர் கவறையோடு. வன்றிறல் நாயக்கராவார்
இந்நற் குடியினோரை யாழ்நக ரழைத்த கோமான்
கோந்தவிழ் கோதைமார்பன குணபூஷணார்னென்பர்.

வந்திடு குடியினோர்க்கு வளந்தவழ் நல்லூர் தன்னிற்
சொந்தமண் பதிகொடுத்துத் துணைமிகப் புரிந்துவாழ்த்தி
விந்தையாய் வஸ்திரத்தில் விசித்திர மெழுதிவந்து
என்றனக் களிப்பீர் கோவிலரண்மனைக் குதவவென்றார்" [56]

இவ்வாறாக மூத்த விநாயகர் கோயில் ஆலயச்சிறப்பு மலரில் தம் மரபினையும் தாம் சாயக்காரரிலிருந்து தொழில் ரீதியாக வேறுபட்ட மரபினர் அதாவது சித்திர விசித்திர வேலைகள் செய்தவர்களாகவும் மற்றும் தாம் நாயக்கத் தொடர்ச்சியின் வம்சம் என்றும் பேசும் இவர்கள் நடைமுறையில் தம் மரபார்ந்த தொழில், தாம் சித்திரக்காரரின் வழித் தோன்றல்கள் என்பதனை அடையாளப்படுத்த விரும்புவதில்லை. அதேபோன்று இவர்களது வழித் தோன்றல்களும் இவ்வேலைப்பாடுகள் பற்றிய அறிவு அல்லது பாரம்பரியம் பற்றிய புரிதல் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

மற்றைய சாதிகளுக்கு கிடைக்காத சிறப்புரிமையும், மரியாதையும் செங்குந்தருக்கு அடுத்து வண்ணாருக்கு கிடைத்துள்ளது. வண்ணார்கள் வெள்ளை கட்டுதலுக்காக கோவிலுக்குள் செல்வதற்கான அனுமதியும், கோயில் சடங்கு சார் பண்பாட்டில் தொடர்புறும் வெளியும் காணப்பட்டது.[57] இவ்வாறு

54 இரகுவரன், *பருத்தித்துறையூராம்*, **245.**

55 *"சித்திரக்காரர்கள் வர்ணங்களைக்கொண்டு சித்திரவிசித்திரவேலைகள் என்பவற்றை வரைந்ததினால் இவர்களையும் சாயக்காரர் என தவறுதலாக அழைக்கப்பட்டுள்ளனர். சாயக்காரர் எனும் வழக்கு தொழிற்பெயரன்றி மரபுப்பெயரன்றென்று"* வேலுப்பிள்ளை, க., *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, **190.**

56 வேலுப்பிள்ளை, *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*, **190**; *நல்லூர் மூத்தவிநாயகர் கேசவ நாயக்கர் வரலாற்றுத் தொகுப்பு*, **21.**

57 சனாதனன், *நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் (1920- 1990)*, **3.**

கோயில் சார் வெளியில் தொழிற்படுவதற்கான தம்மரபினை தொடருதலுக்கு எதிராக சவாலினை எதிர்நோக்கிய போது அதனைக் கைவிடமுடியாது எதிர்ப்பினையும் வெளிக்காட்டியும் உள்ளனர். குறிப்பாக சில வருடங்களுக்கு முன் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் திருத்தவேலைகளின் பின் ஆலய நிர்வாகம் மரபார்ந்தமாக கொடிச்சீலையினை வழங்குபவர்களாகிய வண்ணாரிடமிருந்து கொடிச்சீலை, கொடிக்கயிறு வாங்கும் மரபினைத் தவிர்க்க முயற்சித்தபோதும் இவர்கள் தமது மரபார்ந்த உரிமையை விட்டுக்கொடுக்காது நீதிமன்றம் வரை சென்று போராடி மீண்டும் தம் உரிமையினைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.[58]

ஒல்லாந்த வருகைக்கு முன்னிருந்து இலங்கையின் உள்நாட்டு யுத்தம் வரையான காலம் வரைக்கும் நெசவில் ஈடுபட்டவர்களாகிய பறையர் (குழிப்பறையர்கள்) சமூகத்தினர் அடையாளம் பற்றிய பிரக்ஞையாலும், இந்தியாவிலிருந்து நூலினைப் பெற்றுக்கொள்ளலில் ஏற்பட்ட சிக்கல்களினாலும், அடுத்த சந்ததியினர் வேறு தொழில்களினை நாடிச் செல்வதாலும் நெசவினைக் கைவிட்டிருக்க வேண்டும். நெசவுடன் தொடர்புடைய மற்றைய சாதியினருக்கு காணப்படுகின்ற மரபார்ந்த எச்சங்களும், பாரம்பரியங்களும் இவர்களிடம் காணப்படவில்லை. யாழ்ப்பாண சாதிய, சமூக அடுக்கமைவில் கீழ் நிலையில் இவர்கள் உள்ளதால் கோவில் சார் சடங்கு வெளியில் இவர்களுக்கான இடம் கிடைக்காமல் போயிருக்கலாம். அதனால் சடங்கு சார்ந்து அல்லது சுட்டிப்பான குறியீட்டுத்துவமான பாரம்பரிய எச்சங்கள் இல்லாவிடினும் இன்றும் இவர்களது வீடுகளில் தறி மற்றும் நெசவுக் கருவிகளின் எச்சங்களினைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் அவர்களிடம் இன்றும் நெசவு பற்றிய அறிவும், அனுபவமும் மீட்டுருவாக்கத்தக்க நிலையில் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண சமூகத்தில் நெசவு பற்றிய அறிவோ, அனுபவமோ, மீள்தொடர்வதற்கான ஆர்வமோ அற்ற சமூகங்கள் அதுசார் அடையாளங்களினைக் காவுதலிலும், பேணுதலிலும், கண்டுபிடித்தலிலும் கவனம் செலுத்தி வருகின்றனர் ஆனால் நெசவு பற்றிய மீட்டெடுக்கத்தக்க அறிவும் அனுபவமும் உடையவர்களும், அண்மைக்காலம் வரை பாரியளவில் நெசவில் ஈடுபட்டவர்களுமான சமூகம் எந்தவிதமான சடங்காசார எச்சங்களோ, வரலாற்று முக்கியத்துவமோ அற்றவர்களாக தம் தொழில் அடையாளத்தினையும், பாரம்பரியத்தினையும் சொல்லப்படாத, சொல்லவிரும்பாத வரலாறாய் தமக்குள் பேணி வருகின்றனர். யுத்தத்துக்குப் பின்னராக அண்மைய காலங்களில் ஆரம்பித்துள்ள அரசின் கீழான போசிப்பில் மீண்டும் நெசவினை மிகச் சிறிதளவானோர் தொடங்கியுள்ளனர். பாரம்பரிய பட்டறிவினூடாகவும், தமது தொழில்திறன் தேர்ச்சியாலலும் சாதி அடையாளத்துக்கு அப்பால் ஓர் சிறந்த தொழில்வினைஞர்களாகத் தம்மை அடையாளப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.



58 *நேர்காணல், இ. கந்தசுவாமி, கட்டுரையாளனால் நேர்காணப்பட்டது, 08. 03. 2019.*

**உசாத்துணை நூல்கள்**


Balmforth, Mark. E. “Surveying Lankan Chintz: Slavery, Aesthetics and Textile production in Colonial Jaffna” Talk at Sri Lankan Archive of Contemporary Art, Architecture and Design, Jaffna. Sri Lanka. 2 July 2017.

Cohen, Steven. “The Unusual Textile Trade between India and Sri Lanka: Block-prints and Chintz” *HALI* [special 25th Anniversary issue], June 2004.

Holmes, Walter Robert, *Jaffna, Sri Lanka 1980*. Jaffna: Christian Insitute for the study of religion & society of Jaffna college, 1980.

“History- Senguntha Hindu College” http://web.archive.org/web/20151121171756/http://www.shcthiru.sch.lk/About-1.htm, accessed on 11. 01. 2019

Katiresu, S. *A Handbook to the Jaffna Penninsula & Souvenir of the opening the railway to the north*. Tellipalai: American Ceylon mission press, 1905.

Mutukisna, Henry Francis. *A new edition of the Thesawalama or the lawas of customs of tradition*. Ceylon: Ceylon Times office, 1862.

Peiris, P.E. *The Jaffna Kingdom of Jaffnapatnam*, 1920.

Ragavan, M.D. *Tamil Culture in Ceylon*. Colombo: Kalai Nilayam Ltd, 1971.

Ramaswamy, Vijeya. *Textile and Weavers in Medieval South India*. Delhi: Oxford University Press, 1985.

TamilNet - Know the Etymology: 135, https://www.tamilnet.com/art.html?catid+98&artid=30156. accessed on 09. 04. 2018.

“The Jaffna Dye Root Plant” Hindu Organ. September 30, 1915.

Vink, Markus P.M. *Encounter on the opposite Coast: The Dutch East India and the Nayaka State of Madurai in the Seventeenth Century.* Leiden/ Bostan: Brill , 2015.

இரகுவரன். பா. *பருத்தித்துறையூராம்*. தேடல் வெளியீடு. 2012.

இராசநாயகம். செ. *யாழ்ப்பாணச்சரித்திரம்*. புதுடெல்லி: ஏசியன் எடுகேசுஷன் சர்வீசஸ்.1999.

இராசநாயகம் முதலியார் பெருமாள் கோவில் நிர்வாகத்திற்காக எழுதிய கடிதத்தின் பகுதி.

குணசிங்கம். முருகர். *இலங்கையில் தமிழர்: ஒரு முழுமையான வரலாறு*. சிட்னி : தென் ஆசியவியல் மையம். 2020.

சரவண சதாசிவம். புலவர். *செங்குந்தர் பிரபந்தத் திரட்டு*. ஒட்டக்கூத்தர் மன்றம்: காஞ்சிபுரம். 1993.

சனாதனன். தா. *நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் (1920 – 1990)*. கொழும்பு: குமரன் புத்தக இல்லம். 2018.

சிவத்தம்பி. கார்த்திகேசு. *யாழ்ப்பாணம் சமூகம். பண்பாடு. கருத்துநிலை*. கொழும்பு: குமரன் பதிப்பகம். 2000.

சிவத்தம்பி. கார்த்திகேசு. *யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்*. கொழும்பு: தர்சனா பிரசுரம். 1993.

சிற்றம்பலம். சி.க. *யாழ்ப்பாண இராச்சியம்*. யாழ் பல்கலைக்கழக வெளியீடு. 1992.

செங்குந்த கைக்கோள முதலியார் சரித்திரம்/ Sengundha Kaikola, “இலங்கை செங்குந்த இந்துக் கல்லூரி”, Accessed on 08.04. 2020. https://senguntharmudaliarhistory.blogspot.com/2020/11/Jaffna%20senguntha%20hindu%20college.html.

*நல்லூர் மூத்தவிநாயகர் கேசவ நாயக்கர் வரலாற்றுத் தொகுப்பு*. யாழ்ப்பாணம்: இந்து இளைஞர் சங்கம். 2008.

‘நெசவுத்தொழில்’. ஈழகேசரி. 18.09.1949.

பக்தவத்சலபாரதி. முனைவர். *தமிழர் மானிடவியல்*. புதுத்தெரு. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம். 2002.

பக்தவத்சலபாரதி. முனைவர். *பண்பாட்டு மானிடவியல்*. புதுத்தெரு. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம். 2003.

மாணிக்கவாசகர். மேலைப்புலோலியூர் பொன்னையா. *நாட்டிற்கு நயம்தருவன*. வலி கிழக்குத் தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். 1975.

விஜயகுமார். கள்ளப்பார்ட். “யாழ்ப்பாண சூத்திர வெள்ளாளர் உயர் சாதியா?” Accessed on 10. 03. 2018. https://yaalppaanam.wordpress.com/2012/04/15/வெள்ளாளர்-உயர்-சாதியினரா/.

வேலுப்பிள்ளை. க. *யாழ்ப்பாண வைபவ கௌமுதி*. புதுடெல்லி: ஏசியன் எடுகேசுஷன் சர்வீசஸ். 2004.

“செங்குந்தரும் கொடிச்சீலை கொடுக்கும் வரலாறு.” 04. 09. 2013. Accessed on 10. 01. 2018. https://ia801702.us.archive.org/16/items/senguntharum-kodiselai-kodukum-varalarun/இலங்கை%20செங்குந்தர்%20வரலாறு%20.pdf.

“வீர செங்குந்தர்மரபு” முகநூல், https://www.facebook.com/VeeraSenguntharMarapu?ref=tn_tnmn, Accessed on 13. 03. 2018.